

லயன் காமிக்ஸ்
மர்மக் கோவில்!

# ரூ.5000 பரிசு!



லயன் பிரியர்களே,

அனைவருக்கும் எங்கள் புத்தாண்டு & பொங்கல் வாழ்த்துக்கள்!

இந்த மாதம் வெளிவரயிருந்த "கொள்ளையர் தீவினை" எப்ரல் மாதத்திற்கு ஒத்திப்போட்டிருக்கிறேன். 270 பக்கக் கதையாக இது இருப்பதால், இரண்டு பகுதிகளாகப் பிரித்து வெளியிடலாமென்று முதலில் நினைத்திருந்தேன! ஆனால் ஒரே மொத்தமாக "கோடை மலரில்" வெளியிட்டால் நன்றாக இருக்குமென்று தோன்றியது. அதனால் இந்த மாதம் "மர்மக் கோவில்" கதையை வெளிட்டிருக்கிறோம.

ஒரு அட்டகாசமான நியூஸ்! அடுத்த இதழ் முதல் ரூ. 5000/க்கான பரிசுப் போட்டி ஒன்று தொடங்கயிருக்கிறது! அதன் விபரம் இதோ!

அடுத்த வெளியீடான "எமனுக்கு எமன்" இதழுடன் இலவச இணைப்பாக 16 பக்கங்கள் கொண்ட சின்னதொரு ஆல்பம் தரப்படும்:

இந்த ஆல்பத்தில் நமது காமிக்ஸ் ஹீரோக்கள் 11-பேரின் படங்களை ஒட்டுவதற்கு இடமிருக்கும். பிப்ரவரி '90 முதல் டிசம்பர் '90 முடிய வெளிவரயிருக்கும் 11 லயன் காமிக்ஸின் பின் அட்டைகளிலும் ஒரு ஹீரோவின் படம் அச்சிடப்பட்டிருக்கும். ஒவ்வொன்றாக வெட்டி ஆல்பத்தில் வரிசையாக ஒட்டி வைத்து வரவேண்டும். அத்தோடு அந்தந்த ஹீரோவைப்பற்றி சுருக்கமாக இரண்டு வரி ஆல்பத்தில் எழுதவும் வேண்டும்.

இப்படிப்பூர்த்தி செய்யப்பட்ட ஆல்பத்தை டிசம்பர் '90ல் எங்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும்! குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 10 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா ரூ. 500/-பரிசு வழங்கப்படும்!

அடுத்த 500 பேர்களுக்கு ஆறுதல் பரிசுகள் உண்டு!

ஆகையால் அடுத்தமாத இதழை கண்டிப்பாக வாங்கி விடுங்கள்! மறக்காமல் ஆல்பத்தையும் கேட்டு வாங்குங்கள்!

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் உள்ள வாசகர்களும் ''ஆல்பம் போட்டியில்'' பங்குகொள்ள வேண்டுமென்பதற்காக பிப்ரவரி & மார்ச் மாத வெளியீடுகளை தனிப் பிரதிகளாக தபாலில் அனுப்பத் தயாராக இருக்கிறோம். சந்தாக்கள் ஏப்ரல் முதல் ஆரம்பிக்க உள்ளன. இஷ்டப்பட்டால் பிப்ரவரி & மார்ச் வெளியீடுகளுக்கான பணத்தையும் சந்தா தொகையுடன் சேர்த்து இப்பொழுதே அனுப்பலாம்!

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!

அன்புடன்,

விஜயன்






இந்தக் கூப்பனைக் கத்தரித்து சந்தாத் தொகையுடன் அனுப்புங்கள்!

பெயர்: ____________

வயது: ____________

முகவரி: ____________

____________

சந்தா அனுப்பிய விபரம்: மணிஆர்டர்/டிராப்ட் ____________

காமிக்ஸ்

ஏப்ரல் முதல் சந்தா ஆரம்பம்!


**பிரகாஷ் பப்ளிஷர்ஸ்** த. பெ. எண்: 374, சிவகாசி-626 123.


லயன் காமிக்ஸ்

அடுத்த இதழ் முதல்
ஒரு சூப்பர் தொடர் கதை
ஆரம்பமாகிறது !

படிக்கத்
தவறாதீர்கள்!


மர்மக் கோவில்!
மத்திய அமெரிக்காவிலுள்ள ஃபெலிஸிடாட் நகரத்தில்-
ஸாரி மிஸ்- வேறு அறை எதுவும் காலி இல்லியே!
படுக்கை சரியில்லை- ஷவர் வேலை செய்யவில்லை. ஹூம்!



முன்னதாகவே நான் ரூம் ரிசர்வ் செய்திருந்தும் இப்படித்தானு?
அந்தப் பெண்ணுக்கு ஏதோ பிரச்சனே!
நாம் அவளுக்கு உதவ முடியுமா என்று பார்ப்போம்- வா!


நீங்கள்?
ஹலோ மிஸ்- என் பெயர் ரோஜர்! உனக்கு அவர்கள் தரும் அறை பிடிக்கா விட்டால் என்னுடைய அறையை வேண்டுமானுல் எடுத்துக் கொள்!



நோ ப்ராளம்! நான் உன்னுடை-
யதை எடுத்துக் கொள்கிறேன'
மிக்க நன்றி! என்
பெயர் ரோஸரின்!
நியூயார்க்கிலிருந்து வெளி-
யாகும் 'ஹெரால்டு' பததி
ரிககையின் விசேட நிருபர்!
உன்னை சந்தித்
ததில் மிக்க
மகிழ்ச்சி! உன-
க்கு உதவ ஒரு
வாய்ப்பு கிடைத்
தமைக்கும்தான்!
அவள் அகனறதும்-
விசேட நிருபர்! எனன வேலை-
யாக வந்திருக்காளோ-
தெரியவில்லை!
அதைபபற்றி நமக
கென்ன கவலை?



படுத்த சற்றைகெல்லாம் ஆழ்ந்த நித்திரை யப்பட்டார் ரோஜர்-
நள்ளிரவில் -
தவை திறங்கள்! சீக்கிரம்!
பட்!பட்!
?


யாரது?
சீக்கிரம் கதவை திறங்கள்! சீக்கிரம்! ப்ளீஸ்!
யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?
இ- இது-நீ-நீங்-கள் வந்து
நீங்கள்-எப்படி-


வந்தவன் திடுமென கீழே சரிந்தான்



இவனுக்கு பலமாக அடிபட்
டிருக்கிறது! கையில் எதை
யோ பற்றிக்கொண்டிருக்
கிறானே - என்ன அது?






ஒரு வரைபடம்! ஆனால் இது எந்த இடத்தை குறிக்கிறது என்றுதான புரியவில்லை!


மலைக்கோவில் ஏழு ஆறுகள் அபாயம் - சீக்கிரம் ஏதாவது-


மேற்கொண்டு எதுவும் பேசு முன்னர் சுயவுணர் விழுந்து விட்டான்.
ஹலோ- ரிசப்ஷன்? என்னுடைய அறையில் பலத்த காயங்களோடு ஒருவன் விழுந்து கிடக்கிறான். சீக்கிரம் ஓர் ஆம்புலன்ஸை வரவழையுங்கள்!


பத்து நிமிடங்களுக்குப் பின்-
சிங்க்ளேர்! இவன் என்னைத் தேடித் தான் வந்திருக்கிறான் என் அறை எண் இவனுக்கு நியூயார்க்கிலேயே தெரியும். அறையை நான் மாற்றிக் கொண்டு விட்டது தெரியாமல் மிஸ்டர் ரோஜரின் அறைக் கதவைத் தட்டியிருக்கிறான்!


இவன் எதையோ கண்டுபிடித்து அதை என்னிடம் சொல்ல வந்திருக்கிறான். அது என்ன என்று தெரிய வேண்டும் எனக்கு!


போலீஸ் ஸ்டேஷனில் ரோஜர் வாக்குமூலம் கொடுத்துக் கொண்டிருந்தார்.
அந்த ஆள் மருத்துவமனையை அடைந்ததும் இறந்து விட்டான். அவன் யாரென்று உங்களுக்குத் தெரியவே தெரியாதா மிஸ்டர் ரோஜர்? மயக்கமடைவதற்கு முன் அவன் உங்களிடம் எதுவுமே கூறவில்லையா?
கமிஷனர் சார்- மீண்டும் சொல்கிறேன்- அந்த நபரை இதற்கு முன் நான் பார்த்ததேயில்லை. படபடவென்று கதவைத் தட்டினான். தூங்கிக் கொண்டிருந்த நான் எழுந்து வந்து திறந்தேன் வெட்டுண்ட மரம் போல் மயங்கிச் சரிந்தான். இது தான் நடந்தது!
இப்போதைக்கு உண்மையை வெளியிடுவது உசிதமல்ல. குழப்பம் தான் விளையும்!


மறுநாள் காலையில்-
இந்த வரைபடம் ரியோ ஸ்பிரிடோமலோவைக் குறிக்கிறது. அங்கிருக்கும் ஏழு ஆறுகளும், நீர் ஊற்றுக்களும்தான் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு மலைக் கோவிலும் அங்கு இருக்கிறது!
அந்த அந்நியன் உங்களிடம் சொல்ல முற்பட்டது மலைப் பகுதியில் ஏதோ அபாயம் உருவாகி வருகிறது. அதைத் தடுக்க உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் - என்பதாக இருக்கலாம்!
சபாஷ் - பில! நாம் நாளை அங்கே பயணமாகிறோம். சரிதானே?



அன்றிரவு


ஏய்ய் யார் நீ


பதிலேதும் சொல்லாமல் அவர்மீது பாய முற்பட்டான்-


ஞல் ரோஜரிடம அவனு
யயாச்சா பலிக்கவில்லை
பியோட முற்பட்டான் -
அட - இன்னும் நமக்குள் அறி
முகம் கூட ஆகவில்லை -
அதற்குள் திரும்பி ஓடினல்
எப்படி -



லேசுப்பட்டவனில்லை போலிருக்கிறது.
சாகஸமாய் தப்பி விட்டானே!
இந்த கிழிசல் துண்டு உண்மைகளைப் பேசாது!



நான் யூகித்த மாதிரியே இங்கே எந்தப் பொருளும் காணாமற் போகவில்லை.
சிறிது நேரம் கழித்து-
அந்த வரைபடத்தை எடுத்துச் செல்லவே வந்திருக்கிறான். நாம் ஏழு ஆறுகளையும், அந்த மலைக் கோவிலையும் மறந்து விட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் போலும்!
நம்மை யாரும் தடுத்து நிறுத்த முடியாது! நாம் அங்கே செல்லத் தான் போகிறோம். ப்யூர்டோவில் நமக்கு படகுகள் கிடைக்கும்!


இன்னொரு பக்கம்
நாளை விடிவதற்குள் நான் ப்யூர்டோ சென்றடைய வேண்டும். செலவு என்ன ஆனாலும் சரி- அக்கறை இல்லை!


மறுநாள் — ப்யூர்டோவில்
பொறுமையாக இருங்கள்- நான் வாக்குத் தவறுகிறவன் அல்ல. கண்டிப்பாக உங்க- ளுக்கு படகு தருகிறேன்!


ஒரு வழியாக படகுக்கு ஏற்பாடு செய்தாகி விட்டது!
பயணம் சற்று ஆபத்தானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்!


நம்மை யாரும் பின்தொடர்ந்து வரவில்லையே?
அந்த அந்நியன் தகவல் கொண்டு வந்தது நம்மிடம் சொல்லத்தானா அல்லது வேறு யாருக்குமோ?


ப்யூர்டோவில் காலடி வைத்த விநாடி முதல் தாங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந்த உண்மை ரோஜருக்கும், பில்லுக்கும் தெரியாது.
எதிர்காலம்தான் இந்தக் கேள்விக்குப பதில் சொல்லச் கூடும்!


உல்லாசப் பயணிகளுக்குப் படகை வாடகைக்கு விடு- வதுதானே என் தொழில்! அது தப்பு என்கிறீர்களே- என்ன நியாயம்?
அந்த இரண்டு ஐரோப்பியர்- களுக்கு படகை கொடுத்தா- யோ குடலை உருவி விடு- வேன் - ஜாக்கிரதை!


நன்றாக நினைவில் இருத்திக் கொள்!
ஸார் - ஸார்!



ஆ ஆ - என்னை விடுங்க!


போய்த் தொலை!
சத்!
இப்போதைக்கு இது போதும்! என் எச்சரிக்கையை அலட்-சியம் செய்தாயோ- தெரியும் சேதி!
மறுநாள்-
வாக்குத் தவறுகிறவனில்லை என்று சவடால் பேசினாய் நேற்று- இன்று- படகு இல்லை என்றால் எப்படி?
நான் பிள்ளை குட்டிக் காரன்- என்னை வற்புறுத்தாதீங்க- நான் படகை வாடகைக்கு விட விரும்பவில்லை!


யாரேனும் அவனை மிரட்டியிருப்பார்களோ?
அப்படித்தான் தோன்றுகிறது! பாவம்- போகிறான் விடுங்கள்!
ஒரு மணி நேரம் படகுக்காக அலைந்த பிறகு-
ஒரு படகு விலைக்கு வேண்டும்!
ஸாரி· இதை நான் விற்பதற்கில்லை!



எங்களுக்கு ரொம்ப அவசரமாக தேவைப் படுகிறது. 100 டாலர்கள் தருகிறோம்!
ஹோ 100 டாலர்களா?
எனக்கும் ஒரு படகு விலைக்கு வேண்டும்!
யாரிவன்?
உங்களுக்கே தருகிறேன்- விலை 200 டாலர்கள்!



நாங்கள்தானே முதலில் வந்தோம்- 200 டாலர்களுக்கு நாங்களே எடுத்துக் கொள்கிறோம்!
இல்லே படகு எனக்குத் தான்! இந்தா பிடி பணத்தை!


ஆல்ரைட் இந்தப் படகு எங்களுக்கு வேண்டாம் - நீயே வாங்கிக் கொள்!


பார்வை மூலமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்வது நண்பர்களுக்குக் கை வந்த கலை.
எனவே மறுவினாடி-
க்ளிங்
ஹே-என்ன இது?
டும்!
ஸார்-மெள்ள-பயல் தாங்க மாட்டான்!


இனி போட்டிக்கு வரமாட்டான்!
ஆல்ரைட்-ஸார்! 200 டாலர்கள் இந்தப் படகு உங்களுக்குத் தான்!
ஐயோ வேண்டாம்- விடு என்னை!



அட• குளிககிறதுன்னு அவ்வளவு பயமா உனக்கு?
தொப்!


அடேய் உங்களை பிறகு கவனித்துக கொள்கிறேன்!



பின்னர்—
ஒருவழியாக படகு கிடைத்து விட்டது- ஆனால் வழிகாட்ட யாராவது நம்மோடு வந்தால் நல்லது! இல்லையேல் பாதை மாறிப்போய் அல்லல்பட நேரிடலாம்!
அதோ - அங்கே தொலைவில் ஒரு செவ்விந்தியர் கிராமம் தென்படுகிறது- அங்கே கேட்டுப் பார்ப்போம்!
சற்றைகெல்லாம்-
அதோ-ஜனங்கள்!
நட்புணர்வோடுதான் காணப்படுகிறார்கள். நமக்கு உதவ முன் வருவார்கள் என்றே நம்புகிறேன்!


செவ்விந்தியர்களின் தலைவன் அவர்களுக்கு உதவ சம்மதித்தான்- ஆனாலும்-
மலைக்கோயில் இருக்குமிடத்திற்கா? சமீபத்தில் அங்கே யாருமே சென்றதில்லை - தீய செயல்கள் அங்கே நடைபெறுவதாகக் கேள்வி!
என்ன வகையான தீய செயல்கள்?


திட்டவட்டமாகத் தெரியவில்லை! அந்த பிராந்தியத்தை நோக்கி அடிக்கடி விமானங்கள் சென்று வருகின்றன!


ஏழு ஆறுகளைக் கடக்க மட்டும் எங்களுக்கு ஒரு வழிகாட்டி வேண்டும். நீங்கள் யாரையாவது அனுப்பினால் பணம் தருகிறோம்!


நதிகளை நீங்கள் கடந்தவுடனே அவன் திரும்பி விடுவான்.. சம்மதம்தானே?


மறு நாள் காலையில் பயணம் தொடங்கியது.


வேறொரு படகில் செவ்விந்தி-
யன் ஒருவன் வழிகாட்டியாக
வந்தான்.
இது ஒப்பி கரையின்
ஆரம்பம்!
வழிகாட்டியை அழைத்து
வந்திராவிடில் நாம் திண·
றிப் போயிருப்போம்!
வெய்யில் கடுமையாகத்
தகித்தது ஆனால் பய·
ணமோ தொடர்ந்தது
இந்தக் கானகப் பகுதியைக்
கடந்து விட்டோமேயானால்
ரியோ வந்து விடும்!


திடீரென்று பேரபாயம் ஒன்று அவர்களை எதிர் கொண்டது.
ஏய்ய் ஜாக்கிரதை!
ஸார் சுட வேண்டாம்- கொஞ்சம் பொறுங்கள்!
தோழர்கள் இருவரும் அந்த செவ்விந்தியனை காப்பாற்ற நீரில் இறங்கி ஓடினார்கள்-


தன் சக்தி அனைத்தையும் ஒன்றுதிரட்டி அந்த மலைப
பாம்பின் தலையை இறுகப் பற்றினன் பில்-


ஒரே போடாக போடுங்கள்-ஸார்!


நீங்கள் ஓடோடி வந்து உதவியிராவிடில் இந் நேரம் நான் செத்துப் போயிருப்பேன்-
ஆமாம்- இரண்டு நிமிடம் தாமதித்திருந்தாலும் விபரீதமாகியிருக்கும்!
பத்து மீட்டர் நீளம் இருக்கும் போலி ருக்கிறதே!


அங்கே தங்கிச்செல்வோம். நீங்கள் கூடாரம் அடியுங்கள் நான் தீ மூட்டுகிறேன்!
பின்னர் ..
ஆகா! நாள் முழுகக அலைந்த பிறகு இப்படி ஓய்வெடுப்பது எவ்வளவு சுகமாயிருக்கிறது!
ஆனால் திடீரென்று-
அங்கே என்ன சப்தம்?
டுமீல்!




இன்னும் வேகமாக! அங்கே என்ன விபரீதமோ?
யாரோ துப்பாக்கியால் தாக்குகிறார்கள்!


இவர்களுடைய குறுக்கீட்டை கொஞ்சமும் எதிர்பார்த்திராத கயவர் கும்பல் மிரண்டு விலகி ஓடியது.
பயந்தாங்கொள்ளிகள்! தப்பியோடுகிற வேகத்தைப் பாரேன்!
கயவர்களின் தாக்குதலுக்கு உள்ளான இலக்கில் அவர்கள் கரையேறிய போது அங்கே அவர்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்துக் கொண்டிருந்தது.
வெல்கம் மிஸ்டர் பில்! மிஸ்டர் ரோஜர்!


ஹாய்ய ரோஸலின்- நீயா?
ஆமாம்- நான தான்! ஆனுல் இவ்வளவு சீக்கிரத்தில் உங்-களை மீண்டும் சந்திப்பேன் என்று நான் நினைக்கவே இல்லை!
நீ ஃபெலிஸிடாட்டில் இருப்பதாக அல்லவா எண்ணிக் கொண்டு இருந்தேன்!
அன்றைக்கே நான் கிளம்பி வந்து விட்டேன். யாரிட-மும் தெரிவிக்கவில்லை!



என்னுடைய பத்திரிக்கையின் ஆசிரியர், ரியோ ஸ்பிரிடோ மலோ பகுதியில் வாழும் செவ்விந்தியர்கள் வாழ்க்கை முறை பற்றி விரிவாக எழுதச் சொன்னார். தகவல் சேகரித்துக் கொண்டு போக வந்தேன் இங்கே!
வழிகாட்டியின் துணை இல்லாமல் கஷ்டமாக இல்லையா?




பயணம் செய்யும்போது பொதுவாக யாருடைய துணையையும் நாடுவதில்லை! நான் கானக பகுதியினுள் தனியாக வருவது இது முதல் தடவை அல்ல!
இவள் கண்களில் பயத்தின் சாயலே இல்லை. ஆனால் எதையோ ஒளிக்கிறாள் என்று தெரிகிறது!



நாங்களும் ரியோவை நோக்கித் தான் சென்றுகொண்டிருக்கிறோம் நீயும்எங்களோடுசேர்ந்து கொள்வதில் ஆட்சேபணை ஏதுமில்லையே!
நிச்சயமாக இல்லை! என்னைத் தாககியவர்கள் என்னிடம் எதை எதிர்பார்த்தார்களோ - தெரியவில்லை- ஆனால் நீங்கள் மட்டும் குறுக்கிடாதிருந்தால்-
தனியாக செல்வதையே விரும்புகிறேன் என்று சற்றுமுன் சொன்னவள் இபபோது எங்களோடு வர சம்மதித்தது எப்படி? ஏதோ ஜாலம் பண்ணுகிறள்!
உதவியை மறுத்தால் சந்தேகப்படுவார்கள். நண்பர்களாக ஏற்றுக் கொண்டது போல் நடிக்க வேண்டியதுதான்!



மறுநாள் — மதியம்
இன்னும் சற்று நேரத்தில் அந்த ஆறுகளின் எல்லையிலுள்ள கிராமத்தை தொட்டு விடுவோம்!
பின்னர் - கிராமத்தை நெருங்கியதும் ...
ஜன நடமாட்டத்தையே காணோமே?
இங்கே நிலவும் அசாதாரண அமைதி அச்சமூட்டுவதாக உள்ளது!


ஹலோ! இங்கே யாரும் இல்லையா?
மறு கரையை அவர்கள் திரும்பி பார்க்கத் தவறி விட்டார்கள்.
எதிர் கரையிலிருந்தவன் அவர்களுடைய நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.
யாரும் பதில் குரல் கொடுக்கவில்லையே! விநோதமாக இருக்கிறது!


வாருங்கள்- கிராமத்தினுள் போய்ப் பார்போம்!


ஏதோ ஓர் அபாயம் நம்மை சூழ்ந்து வருவது போல் ஒரு குறுகுறுப்பு ஏற்படுகிறது என் நெஞ்சில்!
எனக்கும்தான்! இங்கே யாருமே இல்லை! ஆனாலும் யாரோ நம்மை குறிவைத்து காத்திருப்பதுபோல் உறுத்துகிறது!


ஒரு ஆசாமி கண்ணில்
பட்டான்!
தயவுசெய்து என்னை பிடித்துக் கொண்டு போய்விடாதீர்கள்!



இவனை எனக்குத் தெரியும்! இந்தக் கிராமத்தின் தலைவன் இவன்!
ஏன் இப்படி பயந்து போயிருக்கிறாய்! இங்கே அப்படி என்னதான் நடந்தது?



தீய நோக்கம் கொண்ட சில வெள்ளையர்கள் இங்கே வந்து எங்கள் இனத்தவர்களை அடிமைகளாக்கிக் கொண்டு போய் விட்டார்கள். நான் தப்பி விட்டேன்!
அந்த வெள்ளையர்கள் இப்போது எங்கே?



எதிர் கரையில்-


றைய வெள்ளையர்கள் வந்தார்கள்-துப்பாக்கி
ளோடு கிராமத்தை சூழ்ந்து கொண்டு ஜனங்
களை வளைத்துப் பிடித்தனர்-
அகப்பட்டவர்களைக்
கடத்திக் கொண்டு
போய் விட்டனர்!


திடீரென்று சீறிவந்த தோட்டா அவனை சாய்த்தது
க்ராங்!
யாரோ சுட்டு விட்டார்கள்! துப்-பாக்கி முழக்கம் தெளிவாக கேட்டதே!
எதிர் கரையிலிருந்துதான் கேட்டது!
பாவம்! துரதிர்ஷ்டசாலி!
இவன் பேசுவதை தடுக்கவே சுட்டிருக்கிறார்கள்!


பன் ஆற்றை சுட்டிக்காட்-
டித் தான் பேசினான்.
ங்கே ஏதோ விரும்பத்தகாத செயல்கள் நடக்கின்றன
று தோன்றுகிறது. என்னவென்று ஆராயத் துடிப்-
க இருக்கிறது எனக்கு. இன்று இங்கே தங்கி விட்டு
நாளை பயணத்தைத் தொடருவோம்!
வு உணவுக்குப்பின், ஒரு
மாற்றி ஒருவர் காவல்
ப்பது என்று தீர்மானித்
கொண்டனர்-
ரோஜரின் முறைவந்த
போது-
ஹே -
விமானங்கள்!


விழித்துக் கொண்டு விட்ட பில்லும், ரோஸலினும் எழுந்தோடி வந்தனர்.
அங்கேயே வட்டமடிப்பது போல தோன்றுகிறது!
நாம் தேடி வந்த இடம்- அதுவாகத்தான் இருக்கும்! நிச்சயமாக அங்கே ஏதோ தில்லுமுல்லு நடக்கிறது!


மறுநாள் நீண்ட படகுப் பயணத்திற்குப் பின்-
இதோ-ஏழு ஆறுகள்!


அருவியை நெருங்கியதும்-
இனி படகு பயன்படாது-
பின்னே?
அதை எங்கேயாவது விட்டு விட்டு கால்நடையாகத்தான் செல்ல வேண்டும்!


இவர்களுடைய உதவி எனக்கு அவசியமில்லை தான்! ஆனால் எப்படி உதறித் தள்ளுவது? பார்த்தால் நல்லவர் களாகத்தான் தோன்-றுகிறார்கள்!
மிஸ்டர் ரோஜர் - நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
நடந்தே போவோம் - வேறு வழி?
பிடிவாதக்காரியாக இருப்-பாள் போலிருக்கிறதே!
புதர்களின் மறைவில் படகுகளை தள்ளினார்கள்.



மலை ஏற்றம் சரியான
சவாலாக இருந்தது.
இன்னும் கொஞ்ச தூரம் தான்-
உச்சியை அடைந்து விடலாம்
ரோஸலின!
கவலைப்படாதீர்கள் மிஸ்டர்
ரோஜர்- நான் சமாளித்து
விடுவேன்!


திடீரென்று தோட்டாக-
கள் சீறிக் கொண்டு
வந்தன.
டுமீல்
பதுங்குங்கள்-
சீக்கிரம்!



எதிரி அறியா வண்ணம் இங்கிருந்து வெளியேறி ஓட வகையில்லை!
ஒருவன் மட்டுமே அங்கிருக் கிறான் என்பது என் கணிப்பு! அவனை தாக்குவோமே?


இது ஒரு பழைய யுக்தி-



பில்லும், ரோஸலினும் துப்பாக்கிகளை முழக்கி எதிரியின் கவனத்தை திசை திருப்பிக் கொண்டிருந்த வேளையில் ஆற்றைக் கடந்து மறுகரையைச் சென்றடைந்தார் ரோஜர்.
அவர்கள் எதற்கும் துணிந்த-வர்கள் போலும்! மிரண்டு திரும்பி ஓடிப் போய் விடுவார்கள் என்றல்லவா எதிர் பார்த்தேன்!
நண்பனே- துப்பாக்கியை அப்படியே விட்டு விட்டு எழுந்து வா!



பில், ரோஸலின் - சுட்டது போதும்! பயலை மடக்கி விட்டேன்!
ஆனால் அந்த வினாடியை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு ரோஜரை நோககிப் பாய்ந்தான் எதிரி


கும்!
அவர்கள் மலை விளிம்பிற்கு வந்து விட்டார்கள்.
இந்தா- இதை வாங்கிக் கொள்! நேரே சொர்க் கத்திற்கு போய்சேருவாய்!
ஆனால்-ரோஜர் மின்னல் வே கத்தில் கொஞ்சம் நகர்ந்து கொள்ளவே-
எதிரி மலைச் சரிவில் பாய்ந்தான்-


இவனை உயிரோடு பிடித்து கேள்விகள் கேட்க முடியாமல் போனது துரதிர்ஷ்டம்!


பின்னர் அவர்களுடைய பயணம் தொடர்ந்தது-
இன்னும் சற்று நேரத்தில் கோவிலை சுற்றியிருக்கும் ஏரியை அடைந்துவிடுவோம்!


அதோ ஒரு ஹெலிகாப்டர் வருகிறது!
நல்ல தற்கல்ல- என்பது உறுதி!


அவர்களை குறிவைத்து நெருங்கி வந்தது அந்த ஹெலிகாப்டர்-


ரட்டட்டட் டட்டட்!
சுடுகிறார்கள்! ஓடி வாருங்கள் -
எங்கேயாவது பதுங்கிக
கொள்வோம்!
ரட்டட் டட்டட் டட்



சுடு!
க்ராக்!
ஹாய்ய்! சரியாக அடித்து விட்டோம்!


தரையிறங்குவதை தவிர வேறு வழியில்லை அவனுக்கு
அதில் இருப்பவர்களை மடக்கி, விசாரணை செய்தால் நமக்கு உபயோகமான தகவல்கள் கிடைக்கலாம்!
சில புதிர்களுக்கும் விளக்கம் கிடைக்கக் கூடும்!


ஹெலிகாப்டரின் திசையில் விரைந்து நடந்தார்கள்
அரைமணி நேரம் பிடிக்கலாம் நாம் அந்த இடத்தைச் சென்றடைய!


அப்போது - திடீரென்று -


ரோஸலின்-என்ன ஆயிற்று உனக்கு?
?
கால் தடுக்கி விட்டது-அவ்வளவுதான்!


ஸார் இதைப் பாருங்கள்-நைலான் கயிறு!
பாரசூட்டின் கயிறுபோல் இருக்கிறது!


அந்த இடத்தில் மண்ணை அகற்றி ஆராய்ந்தார்கள்-


பாரசூட்!
சற்று முன்னர்தான் புதைக்கப்பட்டிருக்க வேண்டும்!
இங்கே ஓடி வாருங்கள்! இதைப் பாருங்கள்!


புதிர் மேலும் இறுகியது-


உருளை வடிவ டப்பா காலியாக உள்ளது!
இதுவும் சற்று முன்னர்தான் இங்கே வந்து சேர்ந்திருக்கும்! புத்தம் புதிதாக இருக்கிறது!



இரவில் வந்த விமானங்கள் எதையோ சுமந்துவந்து இங்கே இறக்கியிருக்கக் கூடும்!
ஆம்-அதுதான் சரியான விளக்கமாகப் படுகிறது!
ஆனால் எதைக் கொண்டு வருகிறார்கள்!
ஹெலிகாப்டரிலிருந்து இறங்கியவர்களைத் தேடிப் பிடிக்க முயற்சிப்போம். நம் அனைத்து சந்தேகங்களுக்கும் விடை அவர்களிடமிருந்து பெற முடியும்!



சற்றைக்கெல்லாம்-
தடியே இல்லை! செத்துப்
போய்விட்டார்களா- அல்
லது ஓடிவிட்டார்களா?
அல்லது நம்மைப் பிடிகக
அருகே ஒளிந்து கொண
டிருககலாம்-ஜாககிரதை!





ஓடிபபோய்விட்டார்கள்
போலிருக்கிறது!
வா உள்ளே போய்
பார்ப்போம்!


இந்தக் கருவிகளிலிருந்து எதையுமே தெரிந்து கொள்ள முடியலையே!


அடுத்து நாம் என்ன செய்யப் போகிறோம்!
கோவில் வரை செல்வோம். எதிரிகளை நாம் அங்கே காண முடியும் என்பது என் கணிப்பு. இங்கே நடைபெறும் விநோத நடவடிக்கைகளுக்கு அங்கே விளக்கம் கிடைக்கும். ஆனாலும், இளம பெண் உனக்கு இது கஷ்டமான அனுபவம்தான் இல்லையா ரோஸலின்?


நான் ஒரு பத்திரிக்கையாளர் என்பதை மறந்துவிடாதீர்கள்- ஒருபுறம் அச்சம் இருந்தாலும் ஆர்வம் என்னை இழுக்கிறது- அங்கே-


தொடர்ந்து நடந்தார்கள் முடிவில்-
அதோ- கோவில்!
மனித நடமாட்டமில்லாத கான- கப் பகுதி மாதிரி தோற்றமளிக் கிறதே இந்த இடம்! சரி-கோவிலை நோக்கி நடப்போம்!
நாம் சற்று நிதானமாக நடந்து கொள்ள வேண்டும். அவசரம் ஆபத்தை விளைவிக்கலாம்!


சந்தேகப்படும்படியாக எதுவுமே கண்ணில் படவில்லை. வாருங்கள் - போகலாம்!


ஓர் அசாதாரண மௌனம் நிலவியது அங்கே-






நிலம் அதிர்கிறது!
நில நடுக்கமா?
சந்தேகமே இல்லை- இது மோட்டாரின் இயக்கம்தான்!
தொடர்ந்து கேட்கிறதே! நிலவறை ஏதும் கீழ இருக்கிறதா என்று ஆராய வேண்டும்!


இங்கே கவனியுங்கள் - சிமெண்ட் புதிதாக பூசப்பட்டிருப்பதுபோல் இல்லை?


கரெக்ட்! ஆனால் இந்த பாழடைந்த கோவிலை இன்னமும் ஏன் இப்படி பராமரிக்க வேண்டும்? உல்லாசப் பயணிகள் யாரும் வருவதுகூட இல்லையே!
சரி இருட்டத் தொடங்கி விட்டது! படுத்து உறங்கி விட்டு நாளை ஆராய்ச்சியைத் தொடர்வோம்!


செவ்விந்தியன் தான் முதலில் காவல் புரிந்தான்
திடீரென்று ஏதோ சலசலப்பு கேட்டது-


ஐயோ - பேய் - பேய்!
பீதியடைந்த அந்த செவ்விந்-
தியன் அலறியடித்துக்
கொண்டு ஓடினான்.


தப்பித்தால் போதும் என்று இலககின்றி ஓடினன்.
உள்ளே உறங்கிககொண்டிருநத மூவருக்கும் தூககம் கலைந்து விடடது-
அது என்ன-விநோதமான சபதம்! பயமாக இருககிறது எனககு!
தெரியவில்லை இது வரை நாம் கேட்டறியாத ஒலி!
வாருங்கள்- போயப் பார்ப்போம்!


ஹே - டிராகன்!
ஐயோ - அது நம்மை நோக்கி வருகிறது. சுடுங்கள் - சீக்கிரம்!


ஆனால் இவ்வளவு தொலைவிலிருந்து ரிவால்வரால் குறி வைப்பது சற்று கடினம்தான்
டுமீல்! டுமீல்!


இயந்திர துப்பாக்கியை எடு!
டமீல் !
தலையை குறி
வையுங்கள் ஸார்!


வதில் வல்லவரான ரோஜரை
ஏமாற்றிவிட்டது அந்த ஜந்து
டமீல்!
டமீல்!
என் குண்டுகள் பாய்ந்தும் தப்பியோடி விட்டதே!


ஓடி விட்டதே அது போதும் நமக்கு!


ஆச்சரியமான சங்கதிதான்! அது திரும்பவும் நம்மை நோக்கி வரலாம் எனவே, அதை தேடிக்கண்டு பிடிக்க வேண்டியது அவசியம்!


எதிர் கரை வரை தேடியும் அகப்படவில்லை அந்த ஜந்து
அதன் தடம் எங்கேயாவது தென்படுகிறதா என்று தேடிப் பார்ப்போம்!


திடீரென்று-
அவர்கள் படகுகளில் தப்பி விட்டார்கள்!


ட்ராகன்! அதோ- அங்கே!


மறுபடியும் தப்பி விடப் போகிறது- விடாதீர்கள்!
டுமீல்! டுமீல்! டுமீல்!


ஆனால் அந்தக் குண்டுகள் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.


அருகில் சென்று பார்த்த தோழர்கள் இருவரும் பெரிதாகச் சிரிக்கலாயினர்


தந்திரமாகத் தப்பியோட ஏமாற்று வேலை! இதன் உள்ளே ஆட்கள் இருந்திருக்கிறார்கள்!



இதைக் குண்டுகள் துளைக்காத இரகசியம் இப்போது புரிகிறது!



கிளம்புங்கள் போவோம்! கோவிலுக்குள் தங்குவோம்- அதுதான் பாதுகாப்பான இடம்!
இந்த விஷமம் எதற்கு?
அவனை பயமுறுத்த! நம் பலத்தை குறைப்பது அவர்களுடைய நோக்கம்!


பின்னர்- இரவு முழுக்க மூவரும் விழித்துக்கொண்டே யிருப்பது என்று தீர்மானித்தனர்-
புகை அதிகமாக வருகிறதே ஏன்? இங்கே வெளிக் காற்றுக்கூட போதுமானதாக இல்லை-


அந்தப் புகை ஒருவித மயககத்தை ஏற்படுத்தியது-


பில்லும், ரோஸ்லினும்
மயங்கிச் சரிந்தனர்-


ஓட வேண்டும் இங்கிருந்து- உடனடியாக வெளிக் காற்றை தாராளமாகச் சுவாசித்தால்தான் நான் தப்ப முடியும்!


காற்று!
காற்று!


ஆனால் புகையின் ஆதிக்கம் அவரையும் அடிமை கொள்-
கிறது. மயங்கி விழுந்து படிகளில் உருண்டார்


பின்னர் .. கீழே ஏதோ ஓரிடத்தில் தலைகுப்புற வீழ்ந்து
கிடந்தார்... இரவு முழுக்க!



பொழுது விடிந்த பிறகுதான் அவருக்கு சுயவுணர்வு திரும்பியது-


என்ன ஆயிற்று எனக்கு? ஓ! ஞாபகம் வருகிறது! அங்கே பில்லுக்கும், ரோஸலினுக்கும் விபரீதமாக ஏதும் ஏற்பட் டிருக்கலாது!


ரோஸலின்! பில்!


அவர்களை உள்ளே காணவில்லை—


ரோஸலின்! பில்!
எங்கே இருக்கிறீர்கள்?



எப்படி மாயமாக மறைந்தார்களோ தெரியவில்லை. அந்தப் புகை? அது எங்கே இருந்து வந்தது?


தொடர்ந்து தீவிரமாக ஆராய்ந்து இறுதியில் விடையைக் கண்டுபிடித்தார் ...
இந்தக் கற்களுக்கு இடையிலுள்ள சிறு இடைவெளி வழியாகத்தான் வந்திருக்கும்!


அவர்கள் இருவரும் மயங்கி விழுந்து கிடக்கும் போது யாரேனும் அவர்களை தூக்கிச் சென்றிருக்கலாம். கோவிலுக்குள் தான் எங்கோ இருக்கக் கூடும்!
குறிப்பிட்டதோர் தளக் கல்லின் மீது அவர் காலை வைத்ததும்-
சுவரில் திடீரென ஒரு மாற்றம் நிகழ்ந்தது.
கடக்!


இரகசிய கதவு- அதன் பின்னால் என்னதான் இருக்கிறது என்று ஆராய வேண்டும்-
கீழ் நோக்கிச்சென்ற படி களில் நிதானமாக, சர்வ ஜாக்கிரதையாக நடந்தார்,


ஓரிடத்தில்-
அடுத்து உலோகத்தாலான கதவு எதிர்பட்டது-
வேறுபக்கமாக சென்று பார்ப்போம்!
பின்னர்
இந்த வழி இங்கே முற்றுப் பெறுகிறது!


அந்த உலோக கதவுக்குப் பின்னால் ஏதோ நடக்கிறது. மேலே கேட்ட மோட்டார் சப்தம் என் சந்தேகத்தை உறுதிப்படுத்துகிறது. அங்கே என் நண்பர்களை நான் சந்திக்க முடியலாம்!



அந்த இடத்தை அங்குல அங்-குலமாக ஆராய்ந்தார் ரோஜர்-


இதோ இங்கே குறுகலாக இடைவெளி தெரிகிறது-
அதன் வழியாக சென்று பார்க்கத்தீர்மானித்தார்-
நீண்டுகொண்டே போகிறதே!
போகப் போக இடைவெளி ரொம்ப குறைச்சலாக இருந்தது.
இந்தப் பாதையாவது முற்றுப் பெற்று விடக கூடாது!


சிறிது நேரம் கழித்து-
ஊஹும் நுழையக கூட இடமில்லை இங்கே-
இந்தப பாறையை அசைத்து நகர்த்த முயற்சிக்கலாம்!
சரியான சவாலாக இருந்தது அது-


தன் சக்தியனைத்தையும் ஒன்று திரட்டிப் போராடினார்.



திடீரென்று மேலே இருந்து கற்கள் பொலபொலவென்று கொட்டலாயின.



தன்னை காப்பாற்றிக் கொள்ளப் போராடினார் ரோஜர் -



ஆகா! வெற்றி பெற்று விட்டேன்!
வழி உருவாகி விட்டது!
ஐந்து நிமிடங்களுக்குப் பின்
கற்கூடம்! இதன் உள்ளே
என்ன தான் இருக்கிறது?





சுரங்கப் பாதை ஒன்று கண்ணில்பட்டது. அதன் வழியாக நடந்தார்





திடீரென்று...
அங்கே வெளிச்சம் தெரிகிறது! அதென்ன?
வேறொரு சுரங்கப் பாதை வழியாக வெளியேறி வந்த டிராலிகள் எதையோ சுமந்து வந்து கொட்டின


எதிர்பார்த்தமாதிரியே இங்கே ஏதோ சட்டவிரோத காரியம் நடைபெறுகின்றது- இரகசியமாக அருகில் சென்று ஆராய வேண்டும்.


டிராலிகள் புறப்படும் இடத்தை கண்டுபிடிக்க வேண்டும்!
காலியாக வந்த டிராலி ஒன்றினுள் பதுங்கியவாறு பயணம் செய்தார் ரோஜர்.


சற்றுத் தொலைவில் நிறைய ஆட்கள் மும்முரமாக ஏதேதோ காரியங்களை
பண்ணிக்கொண்டிருந்தனர்-



இங்கே நான் கீழே இறங்கி, மற்றவர்களின் பார்வையில் படாமல் எங்கேயாவது பதுங்கிக்கொள்ள வேண்டும்.
ஓசையின்றி வெளியே குதித்தார்-
என்ன வகையான விவகாரம் இது என்று புரியவில்லையே! யார் இவர்கள்? என்னதான் செய்கிறார்கள்?


எதற்காக இவர்கள் கூரையில் இவ்வளவு பெரிய ஓட்டை போடுகி றார்கள்?



முதலில் பில்லையும், ரோஸலினையும் கண்டுபிடிக்க வேண்டும்!


இந்த வழியாகச் சென்று தேடிப் பார்ப்போம்!
யாரையும் காணோமே இங்கே!


திடீரென்று உள்ளுணர்வு எச்சரிக்கை விடுக்கவே
சட்டென்று மேலே பார்த்தார்.


ஆனால் - காலம்
கடந்துவிட்டது -


உன்னை எதிர்பார்த்துதான் இந்த ஏற்பாடு செய்து வைத்திருந்தேன். என்னை நீ ஏமாற்றவில்லை!
அடேய் ஆர்கானெட்— நீயா? அடிக்கடி-நீ என் வழியில் குறுக்கிடுகிறாய்?


நீயும் என் விவகாரத்தில் மூக்கை நுழைபபதை எப்போது நிறுத்தப் போகிறாய்- சொல்? இங்கே நான என்ன செய்து கொண்டிருக்கிறேன் ,என்று புரியாமல் குழம்புகிறாயா? சொல்கிறேன் கேள்!
ஆர்கானெட் விவரிக்கலானான்!
ஜன நடமாட்டமில்லாத இந்த இடத்தில் நாங்கள் ஏவுகணைகள் தயாரிக்கிறோம். வட அமெரிக்காவைத தாககுவதறகு ஏவுகணைகள் தயாரித்துத் தருமாறு எங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறது ஒரு நாடு!



தேவையான சாமான்கள் ஃபெலிஸி-டாவிருந்து வருகின்றன!
கடல் படுகையினடியே துவாரங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்! ஏவுகணைகளை கடல் படுகையிலிருந்து நான் செலுத்தப் போகிறோம்.



நீ சொல்கிறபடி இந்த தாக்குதல் நடைபெறாவிட்டால்?
எல்லாமே நஷ்டம்தான். வேறு எதற்கும் பயன படாது!
என்னை என்ன செய்யப் போகிறாய்?
எனக்கு வேலை செய்ய நிறைய ஆட்கள் வேண்டும். நீயும் உன் தோழர்களும், சுரங்கத்தில் வேலை செய்ய வேண்டும்!


பின்னர் உங்கள் உதவி எனக்கு தேவைப்படாத போது-
அப்பாடா! பில்லும், ரோஸலினும் பத்திரமாக இருக்கிறார்கள் அது தான் எனக்கு வேண்டும் இப்போது!
ஸார்!
மிஸ்டர் ரோஜர்!
ஆம்- நானும் வந்து விட்டேன்!


ஃபெலிஸிடாட் நகரில் உங்கள் அறைக் கதவு தட்டியவன் பெயர் சிங்களைர்-ஓர் ஆங்கிலேய பத்திரிகையாளன்! அவன் தேடி வந்தது என்னை! என்னிடம் சொல்ல வந்ததைத்தான் உங்களிடம் சொன்னான்!
இந்த விவகாரம் பற்றி ஏதாவது உண்மைகளை கண்டுபிடித்திருந்தானா?
நானும், அவனும் சேர்ந்துதான் இந்த விவகாரத்தில் ஈடுபட்டோம். ஃபெலிஸிடாட் நகருக்கு உடனே வருமாறு நியூயார்க்கிலிருந்து எனக்கு தந்தி கொடுத்தான். அவனோடு ரியோ ஸ்பிரிட்டோ மலோ செல்லத்தான் அங்கே ஹோட்டலில் அவனை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருந்தேன்!
ஆர்கானெட்டின் சட்ட விரோத செயலை அவன் தெரிந்து கொண்டிருக்கக் கூடும். தாக்கப் பட்ட பிறகு உன்னைச் சந்திக்க ஓடோடி வந்தவன் நாம் அறைகளை மாற்றிக் கொண்டதால் ஏமாற்றம் அடைந்து இருப்பான்!

மறுநாள்-


ரோஜரும், பில்லும் அப்பாவிகள் போல
நடந்து கொண்டனர்-


மாலையில் தங்குவதற்கும் ஓர் இடம்
கொடுக்கப்பட்டது அவர்களுக்கு-


தப்பிக்கும் வழியைப் பற்றி தீவிரமாகச் சிந்தித்தனர்.
கொஞ்சம் வெடி மருந்தைத் நாம் ஒளித்து வைகக வேண்டும்- நாம் தப்பிக்க அது பயன்படும்!
RILS
உங்களுடைய முயற்சிக்கு நான் வேறொரு வகையில் உதவப் போகிறேன் கவனியுங்கள் எவ்வகை-யில் என்று புரியும்!


தேவையான முன்னேற்பாடுகளை
துரிதமாக செய்து முடித்தனர்




டைனமைட்டுகளை ஒளித்து வைத்தனர்-


சில தினங்களுக்குப் பின் முதல் ஏவுகணையை குறிப்பிட்ட இடத்தில் நிலைப்படுத்தினான் ஆர்கானெட்-


அந்த தருணத்திற்காகத்தான் இது வரை பொறுமையோடு காத்திருந்தார்கள் இவர்கள் –


திடீரென்று.



என்ன நடக்கிறது என்று மற்றவர்கள் அறியும் முன்பு ரோஜர் ஒரு சூழ்ச்சி பண்ணலானார்.


சிறிது நேரம் கழித்து-
ஸார்- இது நல்ல யுக்தி தான்! ஆனால்
என் வேடத்தை யாரேனும் கண்டு பிடித்து விட்டால் தொலைந்தோம் இதோடு!
ஊஹூம்- பயல் என்னைக் கண்டுகொள்ளவேயில்லை!



ரோஜர் நிதானமாக
மேலே ஏறினார்
இங்கே நான் என் வேலையை
முடிப்பதற்குள் அங்கே நான்
அடித்து வீழ்த்திய நபர் மயக்-
கம் தெளிந்து எழுந்து விடக்
கூடாது!
இன்னும் ஒரு சில
நிமிடங்கள் தான்!


இனி ஒரே ஓட்டமாக ஓடிப் போய்விட வேண்டும்!
ஸ்ஸ்ஸ்
பில்! ஆரம்பி!
?


மறுகணம் அங்கிருந்த காவலாளியின் மேல் புலியென பாய்ந்தான் பில்..
எல்லாமே மின்னல் வேகம்தான்
எழுந்து வா- ஓட்டம் பிடிப்போம்!


மற்றவர்கள் என்ன, ஏது என்று புரியாமல்
திகைத்து நின்றனர்



டுமீல்!
டுமீல்!
டுமீல்!


முன்பு ரோஜர் வந்த வழியாகச் சென்றனர்-


சீக்கிரம் வெடித்தால் நல்லது!
ஆமாம்- தாமதம் ஏற்பட்டால் நாம் பிடிபட்டு விடும் அபாயம் உண்டு!


என்ன ஆயிற்று?
அந்த மூன்றுபேரும் தப்பி ஓடிவிட்டார்கள்-
அவர்களை தப்ப விடக் கூடாது- ஆபத்து!
அவர்களை தேடத் தொடங்கினார்கள்-



ஆனால் அந்த வினாடிகளில்
கடலின் நடுவே திடீரென்று கொந்-தளிப்பு- பலத்த வெடிச் சப்தத்தை அடுத்து
ஊ ஊ ஊஷ்!
ஐயோ — பிளந்து கொண்டு விட்டது!


கடல் நீர் உள்ளே அருவியாய் கொட்டியது.


சுரங்கத்தினுள் நீர்மட்டம் வேகமாக உயரத் தொடங்கியது.


ரோஜர், பிஸ், ரோஸலின் மூவரும் பதுங்கி ஓடினார்கள்-
தப்பிவிட்டோம் என்று அவர்கள் நம்பிக் கொண்டிருந்தபோது-
மேற்கொண்டு செல்ல வழியில்லை - அடை பட்டிருக்கிறது!


ஹூம் இதை திறப்பது சாத்தியமேயில்லை!
தண்ணீர் இங்கேயும் வந்து விடுமே- நம் கதி கடைசியில் இப்படியா ஆக வேண்டும்?
யோசியுங்கள் சீக்கிரமாக யோசியுங்கள் இந்த இக்கட்டிலிருந்து விடுபட ஏதாவது ஒரு யுக்தி புலப்படாமல் போகாது!


கையில் எதையும் எடுத்துக் கொள்ளாமல் வந்து விட்டோமே சே- மடத்தனம்!
ஆனால் நாம் வெறுங்கையோடு ஓடிவரவில்லையே- அதற்குள் மறந்து விட்டதோ!
ஆங்- ஆமாம்! இதோ இருக்கின்றன என்னிடம்!


ஆமாம்- டைனமைட் குச்சிகள்!
நமக்கு ஆயுள் கெட்டி!
இதைப் பயன்படுத்தி நிச்சயமாகப் பாதை ஏற்படுத்திக் கொண்டு விட முடியும்!



ான் பற்ற வைத்தவுடன், விலகி ஓடிப் போய் விட வேண்டும்!
இங்கே பதுங்கிக் கொள்வோம்!
ஆண்டவனே - இந்த யுக்தி பலிக்க வேண்டும்!


டம்
டமால்!
நம்பிக்கையோடு மூவரும் ஓடிச்
சென்று பார்த்தார்கள்-


ஏற்பட்டிருந்த துவாரம் அவர்கள் நுழைய போதுமான
ாக இருந்தது
ஐயோ வரமுடியவில்லை!
இழுங்கள் என்னை!



சாப்பிடும் போது மூக்குப் பிடிக்கத் தின்றால்
இப்படித்தான்...வெளியே வாடா தடியா!



மூவரும் வெளியேறி கோவிலை தாண்டிச் செல்ல முயன்
றனர்.


அங்கே கடல் நீர் பெருத்த நாசத்தை விளைவித்துக்
கொண்டிருந்தது


அடிமைகள் கிடைத்த வாய்ப்பை தக்க முறையில் பயன்படுத்திக் கொண்டனர்–
ஆர்கானெட்டும், மற்றவர்களும் வெளியேறி வந்தனர்–
செவ்விந்தியர்கள் ஓடிப் போய்விட்டார்கள்!


எல்லாம் நாசம்! அந்தப் பயல் ரோஜரால் வந்த வினை!
அடேய் ரோஜர் - உன்னை விரட்டிப் பிடித்து கொல்லாமல் விடப் போவதில்லை!
படகுகளை எடுங்கள்! அந்த அயோக்கியர்கள் ஏழு ஆறுகளை கடக்குமுன் பிடித்து விடுவோம்!


அரை மணி நேரம் கழித்து


ம்ம் இன்னும் வேகமாகப் போ!


அந்த இயந்திரப் படகு படுவேகப் பறந்தது
அங்கே ரோஜர், பில், ரோஸலின் மூவரும் விரைந்து சென்று கொண்டிருந்தார்கள்


படகை இங்கே தானே விட்டுச் சென்றோம்?
அந்த இடம்தான்- ஆனால் படகு அங்கில்லை-
காணோமே?


செவ்விந்தியர்கள் எடுத்துக் கொண்டு ஓடி விட்டார்களோ?
செவ்விந்தியர்கள் அதைச் செய்யவில்லை ரோஜர்?


ஆர்கானெட்!


ஆம் நானேதான்! இவ்வளவு சீக்கிரத்தில் மீண்டும் நம் சந்திப்பு நிகழும் என்று நீ எண்ணிப் பார்த்திருக்க மாட்டாய்- இல்லையா? எதையும் உடனுக்குடன் கணக்குத் தீர்த்துவிட வேண்டும் என்பது என் கொள்கை-
சும்மா துள்ளாதே!
நீ செத்திருப்பாய் என்றல்லவா நினைத்தோம்- சைத்தான் மாதிரி எதிரில் வந்து நிற்கிறாயே!


தவறு! நான் சைத்தானல்ல- எமன்! உங்களின் எமன்!
யாருக்கு யார் எமனென்று பார்த்து விடலாம்!
கும்!
இந்தா- இது உனக்கு!
கும்!



அந்த இரு ஹீரோக்களும் தூள் கிளப்பினார்கள்


ஆனால் எதிரிகளின் எண்ணிக்கை பலத்தினால்
ஆர்கானெட்டின் கைதிகளானார்கள்


நன்றாக இறுக்கிக் கட்டுங்கள்!


உன்னை நான் ஒரே கணத்தில் பிணமாக்க முடியும்! ஆனால் என் எதிர்காலத்தையே நாசம் பண்ணியவன் நீ-சித்திரவதை பட்டுச் சாகவேண்டும்!
என்னை என்ன வேண்டுமானாலும் செய்- ஆனால் மிஸ் ரோஸிலின் ஏதுமறியாதவள் - அப்பாவி! அவளை விட்டுவிடு!



அவர்களேக் குறிப்பிட்ட-
தோர் இலக்குகு நடத்-
திச் சென்ருன் ஆர்கா-
னெட்
மரக்கிளேயில் கட்டு இவர்களே!


எங்களே என்ன செய்யப் போகிருய்?
உன் தோழர்களுக்கு இந்தக் காட்டைப் பற்றி நன்ருகத் தெரியும். அவர்களிடம் கேள் அடுத்து என்ன நடக்கப் போகிறதென்று!




சலசலவென்று ஏதோ சப்தம் கேட்டது
சலசலசலல!
அது விடுத்த செய்தி ரோஜருக்குப் புரிந்தது
ராட்சஸ கடி எறும்புகள்!
எமனின் தூதுவர்களாக இரையை தேடி வெறியோடு வந்தது அந்த எறும்புப் படை ..


ஆயிரக் கணக்கில் அல்ல —
இலட்சக் கணக்கில்-


இப்போது புரிந்தி-
ருக்குமே - நீ அப்போது
கேட்ட கேள்விக்கான
விடை!


ஹா·ஹ் ஹா!
நீ ஒரு கிராதகன்! ஈவிரக்கம் இல்லாத அரக்கன்!
ஈனப் பிறவியான உன் முகரையை கிடைத்த சந்தர்ப்பத்திலேயே நான் பெயர்த்திருக்க வேண்டும்!



அப்பொழுது-
வாயைக் கிழித்து விடுவேன்- ஜாக்கிரதை!
அப்படியே நில்லுங்கள் யாரும் அசையக் கூடாது!
டுமீல்! டுமீல்! டுமீல்!


வந்தவர்கள் போலீஸ்காரர்கள் ..
துப்பாக்கிகளைக் கீழே போடுங்கள்!
உங்களை கைது செய்கிறேன். தப்பியோட முயற்சித்தால் நாய்களைச் சுடுவது போல் சுட்டு விடுவேன் - ஜாக்கிரதை!


மிக்க நன்றி இன்ஸ்பெக்டர்! மரணத்தின் பிடியிலிருந்து மீட்டு விட்டீர்கள் எங்களை!


ஜோஸ்- நீ திரும்பி வருவாய் என்று நான் எதிர்பார்க்-கவேயில்லை!
கிராமத்திற்கு ஓடிச் சென்று. அங்கே நடக்கும் அட்டூழியம் பற்றியும் உங்களுக்கு ஏற்பட்டுள்ள பேரபாயம் பற்றியும் இன்ஸ்பெக்டரிடம் எடுத்துரைத்-தேன்!


இவர்களை என்ன செய்யப் போகிறீர்-கள் இன்ஸ்பெகடர்?
பெலிஸிடாட் நகருக்கு கொண்டு போவோம்-நீங்கள்தான் சாட்சிகள்!
அது எங்களுடைய கடமை! கட்டாயம் வருகிறோம் உங்களோடு!
எங்களுடைய வாக்குமூலத்தைக் கேட்பவர்களுக்கு அதை நம்புவதற்கு சற்று கடினமாக இருக்கும்!


அதையடுத்து
மீண்டும் நான் இங்கு வர வேண்டும், புகைப்படங்கள் எடுக்க! புகைப படங்களைக் கொண்டு செல்லா விட்டால் ஏதோ கதை கட்டுகிறேன் என்று பத்திரிகை ஆசிரியர் என் கட்டுரையை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுவார்!


புகைப்படங்களை கூட ஏமாற்று வேலையோ என்று சந்தேகப் படும் வகையில் நம்ப முடியாத சங்கதிகள் நடந்து விட்டிருக்-கின்றன இங்கே!
கலையழகு மிககது அந்த புராதனக் கோவில். மறு முறை வரும் போது நிதானமாகப் பார்த்து ரசிக்கலாம்'
இதோ இந்த சிலை கூட அழகாகத்தானிருக்கிறது. கண்டு ரசிக்க இரண்டு கண்கள் போதாது!

# புக் மார்க்கெட்

டியர் ரீடர்ஸ்,

உங்களிடம் இல்லாத பிரதிகள்/விற்பனைக்கு உள்ள பிரதிகள் பற்றிய விபரத்தை எழுதி அனுப்புங்கள். இந்தப் பகுதியில் அதைப் பிரசுரம் செய்கிறோம். இஷ்டப்படும் வாசகர்கள் நேரடியாக பிற வாசகர்களுடன் தொடர்பு கொண்டு பிரதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

தேவை.

1) இராட்சஸக் குள்ளன் (லயன் வெளியீடு எண்: 46) — ரூ. 2/-
2) பிசாசுக் குரங்கு திகில் வெளியீடு எண்:4 — ரூ. 2-25

மேற்கண்ட இரு பிரதிகளும் விற்பனைக்கு இருந்தால் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

தா. மாரிமுத்து,
11, C.K. காலனி,
கோயம்புத்தூர்-
641044.

தேவை

1) எத்தனுக்கு எத்தன் (லயன் வெளியீடு எண்: 3) — ரூ. 2/-
2) மாடஸ்டி IN இஸ்தான்புல் (லயன் வெளியீடு எண்: 2) — ரூ. 2/-
3) பயங்கர நகரம் (லயன் வெளியீடு எண்: 9) — ரூ. 2/-
4) பழி வாங்கும் பொம்மை (லயன் வெளியீடு எண்: 12) — ரூ. 2/-
5) சைத்தான் விஞ்ஞானி (லயன் வெளியீடு எண்: 15) — ரூ. 3/-

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

S. இராமகிருஷ்ணமூர்த்தி,
27, M.G. பாளையம்,
கொளப்பலூர்-638 456 (P.O.)
கோபி (T.K.) பெரியார் (D.T.)

தேவை!

1) இரும்பு மனிதன் ரூ. 4/-
(லயன் வெளியீடு எண்: 5)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

G. சிவராமன்,
சந்தை அருகில்,
மேட்டுத் தெரு,
இடைப்பாடி,
சங்ககிரி (T.K.)
சேலம். (D.T.) - 637 101.

தேவை!

1) இரத்தப்படலம் பாகம்: 1 ரூ. 2-25
(திகில் வெளியீடு எண்: 6)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

கோவி. மணிவண்ணன் M.A B.ED.
S/o. K. கோவிந்தராஜன்,
6, மேட்டுத் தெரு,
விருத்தாச்சலம் 606 001.

தேவை!

1) டாக்டர் டக்கர் ரூ. 2/-
(லயன் வெளியீடு எண்: 4)

2) பாதாளப் போராட்டம் ரூ. 2/-
(லயன் வெளியீடு எண்: 5)

3) கடத்தல் குமிழிகள் ரூ. 2/-
(லயன் வெளியீடு எண்: 10)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

வி. விஜய்,
S/o. S. விநாயக சுந்தரம்,
பரப்பாடி,
நாங்குநேரி (T.K.)
திருநெல்வேலி 627 110.

தேவை!

1) பழி வாங்கும் பொம்மை (லயன் வெளியீடு எண்: 12) ரூ. 2/-

2) காணமல் போன கடல் (லயன் வெளியீடு எண்: 14) ரூ. 2/-

3) சைத்தான் விஞ்ஞானி (லயன் வெளியீடு எண்: 15) ரூ. 3/-

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

M. முருகன்,
S/o M. முனியாண்டி,
வேது வீதி,
முத்துராமலிங்கபுரம்,
பைக்காரா,
மதுரை-17.

தேவை!

1. சூப்பர் ஸ்டார் ஸ்பைடர் -
(மரணப்பாஸி இலவச இணைப்பு)
(லயன் வெளியீடு எண்: 48)

2) மிஸ்டர் மர்மம் - ரூ. 2.50
(லயன் வெளியீடு எண்: 59

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

'சின்னஞ்சிறுகோபு'
மங்கை நல்லூர் பஜார், P.O.
மயிலாடுதுறை-ஆர்.எம்.எஸ்.
பின்: 609 404.



பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த. பெ. எண்: 374. சிவகாசி-626 123. போன்: 21159. அச்சிட்டோர்: ஸ்ரீ விஜய் புக்ஸ், சிவகாசி 626 123. வெளியீடு எண்: 66.